
**நவம்பர் – 05**

# TNPSC துளிகள்

- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தில் (UPI), 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 45% ஆண்டாண்டு அதிகரிப்புடன் 23.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 16.58 பில்லியன் பரிவர்த்தனைகள் பதிவாகியுள்ளது.
- சர்வதேச மித வறண்ட வெப்பமண்டலப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ICRISAT) தலைமை இயக்குநர் பதவியில் இருந்து விலகும் டாக்டர் ஜாக்குலின் டிஅரோஸ் ஹூஜேஷ், உலக வேளாண் மன்றத்தின் (WAF) தலைமைச் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்திய இராணுவம் மற்றும் அமெரிக்க இராணுவ சிறப்புப் படைகளுக்கு இடையேயான வஜ்ர பிரஹார் எனப்படும் 15வது கூட்டு இராணுவப் பயிற்சியானது (2024) அமெரிக்காவில் நடத்தப் பட்டது.
- ஜகார்த்தாவில் நடைபெறும் இந்தியா-இந்தோனேசியா இடையிலான கருட சக்தி-24 எனப்படும் 9வது கூட்டு சிறப்புப் படைப் பயிற்சியில் இந்திய இராணுவம் மற்றும் இந்தோனேசியா இராணுவம் ஆகியவை பங்கேற்கின்றன.
- 'இணையவெளிப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கானத் தேசிய அளவிலான ஒரு தூதராக' நடிகை ராஷ்மிகா மந்தனா நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது (ICG) 60% உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சில கூறுகளுடன் கூடிய 'அதம்யா' மற்றும் 'அக்சர்' எனப்படும் இரண்டு விரைவு ரோந்துக் கப்பல்களை (FPVs) ஒரே நேரத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணிக்காக அதிக விக்கெட்டுகளை (314) வீழ்த்திய ஐந்தாவது வீரர் என்ற பெருமையினை இரவீந்திர ஜடேஜா பெற்றுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2025





- மிகவும் தாமதப் படுத்தப்பட்டுள்ள பத்தாண்டு கால மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் தேசிய மக்கள்தொகை பதிவேட்டை (NPR) புதுப்பிக்கும் பணியானது 2025 ஆம்

ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட உள்ளது.

- இதன் தரவுகளானது 2026 ஆம் ஆண்டில் அறிவிக்கப் படும்.
- இந்தியாவின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பானது 1951 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.
- ஆனால் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக 2021 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியை மேற்கொள்ள முடியவில்லை.
- இதனால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு சுழற்சி மாற வாய்ப்புள்ளது.
- எனவே, அடுத்தக் கணக்கெடுப்பு சுழற்சி காலம் 2025-2035 ஆகவும், அதற்கு அடுத்ததாக 2035-2045 ஆகவும் இருக்கும்.
- இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது குடிமக்களிடம் 31 கேள்விகள் கேட்கப் படும்.
- இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆனது பத்தாண்டுகளுக்கு ஒரு முறை பதிவு செய்யப் படுகிறது என்பதோடு முதல் கணக்கெடுப்பு ஆனது 1872 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- சுதந்திரத்திற்குப் பிந்தைய முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆனது, 1951 ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்டதோடு, கடைசியாக 2011 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் தரவுகளின்படி, சில முக்கியத் தரவுகள் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையானது 121 கோடி, பாலின விகிதம் 1,000 ஆண்களுக்கு 940 பெண்கள், எழுத்தறிவு விகிதம் 74.04% ஆகியன ஆகும்.
- மக்கள்தொகை வளர்ச்சியானது 2001 முதல் 2011 ஆம் ஆண்டு வரையில் 17.64% ஆக இருந்தது.

## மேக உருவாக்க ஆய்வுக் கட்டமைப்பு




- கடந்த மாதம் அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட மௌசம் திட்டம் ஆனது, நாட்டில் வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்தச் செய்வதை மட்டுமல்லாமல், சில வானிலை நிகழ்வுகளை மேலாண்மை செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனத்தில் (IITM) இந்தியா இத்தகைய வகையிலான முதல் மேக உருவாக்க ஆய்வுக் கட்டமைப்பினை (அறை) நிறுவுகிறது.
- ஒரு மேக அறையானது மூடிய உருளை அல்லது குழாய் வடிவ குவளை போன்றது என்பதோடு இதனுள்ளே நீராவி, தூசிப் படலங்கள் போன்றவை உட்செலுத்தப் படச் செய்கின்றன.

- இந்த அறைக்குள் தேவையான ஈரப்பதம் மற்றும் வெப்பநிலையின் கீழ், ஒரு மேகம் உருவாக இயலும்.
- மேகத் துளிகள் அல்லது பனித் துகள்களை உருவாக்கும் சில தூண்டுதல் துகள்களை அறிவியலாளர்கள் தொடர்ந்து ஆய்வு செய்ய இந்த வசதி வழி வகுக்கும்.
- இந்தியப் பருவக்காற்று மேகங்களைப் பற்றி நன்கு ஆய்வு செய்வதற்குத் தேவையான, வெப்பச்சலன பண்புகளைக் கொண்ட மேக அறையை இந்தியா உருவாக்கி வருகிறது.

## இந்திய சைகை மொழியின் விரிவாக்கம்




- இந்திய சைகை மொழி (ISL) அகராதியில் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழியில் உள்ள சொற்கள் உட்பட சுமார் 2,500 புதிய சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த விரிவாக்கம் ஆனது, குறிப்பாக அறிவியல், கலாச்சாரம் மற்றும் இணையம் தொடர்பான சூழல்களில் காது கேளாதோர் சமூகத்தின் ஈடுபாட்டை எளிதாக்கியது.
- இது இந்திய சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தினால் (ISLRTC) நன்கு முன்னெடுத்து மேற்கொள்ளப்பட்டது.

## காசநோய் அறிக்கை 2024 – WHO

**TB CASES IN INDIA OVER THE YEARS**

| | India TB Report 2020 | 2023 | 2024 |
|---|---|---|---|
| Estimated TB cases | 26.9 lakh | 27.4 lakh | 27.8 lakh |
| Number of cases reported | 24.04 lakh | 24.2 lakh | 25.5 lakh |
| Reporting from private sector | 6.8 lakh | 7.3 lakh | 8.4 lakh |
| % cases from private sector | 28.20% | 30% | 32.90% |
| Estimated mortality | 4.36 lakh | 3.2 lakh | 3.2 lakh |

- 2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 237 ஆக இருந்த காசநோய் பாதிப்பானது 2023 ஆம் ஆண்டில் 17.7 சதவீதம் குறைந்து 195 ஆக குறைந்து உள்ளது.

- இது உலகளாவிய 8.3 சதவீதச் சரிவை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 27 லட்சம் காசநோய் பாதிப்புகள் பதிவானதாக மதிப்பிடப் பட்டுள்ள நிலையில் அதில் சுமார் 25.1 லட்சம் பாதிப்புகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## காங்-ரே புயல்





- காங்-ரே புயல் ஆனது தைவான் கிழக்குக் கடற்கரையில் கரையைக் கடந்தது.
- சுமார் 30 ஆண்டுகளில் தைவானை நேரடியாக தாக்கிய மிகப்பெரியப் புயல் இது ஆகும்.
- தைவானின் புயல் உருவாக்கப் பருவம் ஆனது பொதுவாக ஜூலை மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் வரும்.
- ஆனால் இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் தைவானை இரண்டு பெரிய புயல்கள் தாக்கியுள்ளன என்ற நிலையில் இதில் மற்றொன்று அதி தீவிர புயல் க்ராத்தான் ஆகும்.
- சமீபத்திய தசாப்தங்களில் தைவானைத் தாக்கிய மிக மோசமான புயல் 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் உருவான மொராகோட் புயல் ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## முதல் கருந்துளை மும்மை அமைப்பு

- இயற்பியலாளர்கள் முதன்முறையாக ஒரு "கருந்துளை மும்மை" என்ற அமைப்பினை கண்காணித்து ஆய்வு செய்து வருகின்றனர்.
- இது ஒரு மைய கருந்துளை, அதைச் சுற்றி நெருக்கமாகச் சுழலும் நட்சத்திரம் ஒன்று, மேலும் ஒரு தொலைதூர நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இதில் அண்மை நட்சத்திரம் ஆனது கருந்துளையை 6.5 நாட்களுக்கு ஒருமுறை சுற்றி வருகிறது.
- இரண்டாவது மற்றும் நெடுந்தொலைவில் உள்ள நட்சத்திரம் ஆனது அதன் சுற்றுப் பாதையை நிறைவு செய்ய சுமார் 70,000 ஆண்டுகள் ஆகும்.

- இது சிக்னஸ் விண்மீன் திரளில் அமைந்துள்ளது.
- இந்த அமைப்பு ஆனது பூமியிலிருந்து சுமார் 8,000 ஒளி ஆண்டுகள் என்ற தொலைவில் அமைந்துள்ளது.
- V404 சிக்னி எனப்படும் மைய கருந்துளையானது, நமது சூரியனை விட ஒன்பது மடங்கு அதிக நிறை கொண்டது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### மதேய் வனவிலங்குச் சரணாலயத்தில் புலிகள்





- கோவாவில் உள்ள மதேய் வனவிலங்குச் சரணாலயத்தில் ஒரு இளம் வயது புலி மற்றும் மூன்று குட்டிகள் தென்பட்டுள்ளன.

- இந்தக் காடுகளில் புலி இனத்தின் முதல் சான்றானது பதிவு செய்யப்பட்டுள்ளதை இது குறிக்கிறது.
- இந்தக் காப்பகம் ஆனது 2020 ஆம் ஆண்டு முதல் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களின் எல்லையாக உள்ளது.
- கோவாவில் உள்ள மதேய் வனவிலங்குச் சரணாலயம் ஆனது 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் 55வது புலிகள் வளங்காப்பகமாக அறிவிக்கப்பட்டது.
- மதேய் நதியானது இந்தச் சரணாலயத்தின் வழியாக பாய்கிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## செயற்கை நுண்ணறிவுத் தயார்நிலைக் குறியீடு 2023/24 - IMF

- உலகளாவிய செயற்கை நுண்ணறிவு சந்தையின் பரவல் ஆனது, 2024 ஆம் ஆண்டு 2030 ஆம் ஆண்டு வரையில் 36.6% என்ற கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- பெரும் தடையற்ற செயற்கை நுண்ணறிவு ஏற்பிற்கு மிகவும் தயாராக உள்ள நாடாக சிங்கப்பூர் திகழ்கிறது.
- டென்மார்க் (#2), நெதர்லாந்து (#4), எஸ்டோனியா (#5), பின்லாந்து (#6), மற்றும் சுவீடன் (#10), ஆகியவை தேசிய செயற்கை நுண்ணறிவு முன்னெடுப்புகளை முன்னதாகவே ஏற்றுக் கொண்ட நாடுகளாகும்.
- இதில் மொத்தம் உள்ள 174 நாடுகளில் இந்தியா 72வது இடத்தில் உள்ளது.
- இதில் வங்காளதேசம் 113வது இடத்திலும், இலங்கை 92வது இடத்திலும், சீனா 31வது இடத்திலும் உள்ளது.




# மாநிலச் செய்திகள்

## சூரியத் தொலைநோக்கி திட்டம் – லடாக்

- சூரியனைக் கண்காணித்து ஆய்வு செய்வதற்காக, இந்தியா லடாக்கில் தேசிய மற்றும்


பெரிய அளவிலான சூரிய தொலைநோக்கியினை (NLST) அமைக்க முயன்று வருகிறது.

- ❖ தேசியப் பெரிய சூரிய தொலைநோக்கியானது இரண்டு மீட்டர் ரக ஒளியிழை சார்ந்த மற்றும் அண்மை அகச்சிவப்பு (IR) அலைநீளத்திலான ஒரு கண்காணிப்பு மையமாக இருக்கும்.
- ❖ லடாக்கின் மேராக் எனுமிடத்தில் உள்ள பாங்கோங் சோ ஏரியின் கரையில் சுமார் 4,200 மீட்டர் உயரத்தில் இந்தத் தொலைநோக்கி நிறுவப்பட உள்ளது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச உயிர்க்கோளக் காப்பகங்கள் தினம் - நவம்பர் 03




- ❖ சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும், மிகவும் நிலையான மேம்பாடு பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதிலும் உயிர்க்கோளக் காப்பகங்களின் முக்கியத்துவத்தை முன்னிலைப் படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ யுனெஸ்கோ பொது மாநாட்டின் 41வது அமர்வில் இது அறிவிக்கப்பட்டது.
- ❖ 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் குன்மிங்-மாண்ட்ரியல் உலகளாவிய பல்லுயிர்ப் பெருக்கக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம் தேசிய அளவில் நிர்ணயிக்கப் பட்ட இலக்குகளை அடைய உயிர்க்கோளக் காப்பகங்கள் பங்களிக்கின்றன.

- தற்போது 136 நாடுகளில் மொத்தம் 759 உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன.
- இந்தியாவில் 18 அறிவிக்கப்பட்ட உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன.
- இந்த உயிர்க்கோளக் காப்பகங்கள் என்பது மையம், இடையகம் மற்றும் மாற்றம் கொண்ட மண்டலங்களைக் கொண்டிருக்கின்றன என்ற நிலையில் ஒவ்வொன்றும் வளங்காப்பு மற்றும் மேம்பாட்டில் வெவ்வேறு பங்குகளை வகிக்கின்றன.

# இதரச் செய்திகள்

## சிம்மாச்சலம் கோயில் - தெலுங்கு கல்வெட்டு

- இந்தியத் தொல்லியல் துறை (ASI), 13 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த சிம்மாச்சலம் கோவிலில் உள்ள ஹனுமான் சிலைக்கு மேலே உள்ள சுவரில் ஒரு தெலுங்கு மொழியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டைக் கண்டறிந்துள்ளது.
- இந்தக் கல்வெட்டு ஆனது, கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.
- பூரி ஜெகநாதர் தெய்வத்தின் வழிகாட்டுதலின் கீழ் தம்மு முதலியின் மகனான கூர்ம முதலி, ஹனுமான் கோயிலைக் கட்டிய விவரங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.
- சிம்மாச்சலத்தில் உள்ள பெரும்பாலான கல்வெட்டுகள் ஒடியா மொழியில் உள்ளன என்ற நிலையில் இது கிழக்கத்திய கங்கர்கள் வம்சத்துடனான கோயிலின் வரலாற்றுத் தொடர்புகளைப் பிரதிபலிக்கிறது.
- ஆந்திர மாநிலத்தில் உள்ள 32 நரசிம்மர் கோயில்களில் சிம்மாச்சலமும் ஒன்றாகும்.



## தொலைந்த மாயன் நகரம்

- மெக்ஸிகோவில் காடுகளின் பரவலில் மறைந்து போன ஒரு பெரிய மாயன் நகரம் ஆனது பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- தென்கிழக்கு மாநிலமான காம்பேச்சியில் பிரமிடுகள், விளையாட்டு மைதானங்கள், மாவட்டங்களை இணைக்கும் தரைப்பாதைகள் மற்றும் சுற்று மாளிகையரங்கம் ஆகியவற்றினைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- LiDAR, அல்லது ஒளி மூலமான கண்டறிதல் மற்றும் எல்லையறிதல் எனப்படும் தொலை உணர்வி தொழில்நுட்பம் ஆனது இதனை மீண்டும் உருவாக்கப் பயன்படுத்தப் பட்டு உள்ளது.
- இந்தப் பகுதிக்கு அருகிலுள்ள ஒரு குளத்தின் பெயரால் இந்தப் பகுதிக்கு வலேரியானா என்று பெயரிட்டுள்ளனர்.

- மொத்தத்தில், ஆராய்ச்சியாளர்கள் வலேரியானாவில் 6,764 கட்டமைப்புகள் மற்றும் பல்வேறு அளவுகளில் உள்ள பிற கிராமப்புற மற்றும் நகர்ப்புறக் குடியிருப்புகளை அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த மாயன் நாகரிகமானது, தற்போதைய பெலிஸ், எல் சால்வடார், கௌத்திதமாலா மற்றும் தென்கிழக்கு மெக்ஸிகோ வரையில் பரவி, கி.மு.1000 முதல் கி.பி. 1500 ஆம் ஆண்டு வரை நீடித்திருக்கக் கூடும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★